OS.No. 46/2023

Date : 07.02.2026

Witness Name & Rank – பெரியசாமி - PW1

**சாட்சி அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.காம் படித்துள்ளேன். எனது வயது என்ன என்றால் 43 ஆகும். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் 10 – 12 ஆண்டுகளாக கம்பெனிக்கு வேலை சென்று வருகிறேன். எனது மாத வருமானம் எவ்வளவு என்றால் சுமார் 25 முதல் 30 ஆயிரம் வரும். நான் முறையாக வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை. எனக்கு 2 வது பிரதிவாதியை எவ்வாறு தெரியும் என்றால் அவர் இடத்தை விற்பதற்காக முயற்சிப்பதாக ஒரு தரகர் என்னிடம் சொன்னார் அவ்வாறு தெரியும். அவரது குடும்பத்தை தெரியுமா என்றால் ஓரளவிற்கு தெரியும். எனது வீட்டிற்கும் அவரது வீட்டிற்கும் எவ்வளவு துாரம் என்றால் சுமார் 1 கி.மீ இருக்கும். எவ்வாறு இடம் பேசப்பட்டது என்றால் நான் சென்று பிரதிவாதிகளிடம் விசாரித்தேன், அவர்கள் இடத்திற்குண்டான ஆவணங்களை காண்பித்தார்கள் எனக்கு இடம் பிடித்திருந்ததால் அதன் பிறகு மற்றொரு நாள்சென்று முன் பணம் கொடுத்து கிரையஒப்பந்தம் எழுதிக்கொண்டோம்.
2. கிரைய ஒப்பந்தம் எங்கு எழுதப்பட்டது என்றால் தட்டச்சர் அலுவலகத்தில் தயாரித்து காலை 11 மணிக்கு கையொப்பம் செய்தேன். நான் கிரைய ஒப்பந்த முத்திரைத்தாளை கோயமுத்துாரில் வாங்கினேன் என்றால் சரிதான். மேற்படி முத்திரைத்தாள் 13.12.2019 ம் தேதி வாங்கினேன் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்த தேதியும் 13.12.2019 என்றால் சரிதான். நான் 13.12.2019 ம் தேதி கோயமுத்துாரில் முத்திரைத்தாள் வாங்கிய நிலையில் ஒரு மணிநேரத்தில் பல்லடத்தில் கிரைய ஒப்பந்தம் கையொப்பம் செய்ததாக சொல்லியுள்ளது ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை எனவே வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ஜாதக நம்பிக்கை உண்டு என்றால் சரிதான். எனவே மேற்படி கிரைய ஒப்பந்த தினத்தில் நான் சொன்னநேரத்தில் ராகுகாலம் ஆகும். எனவே நான் அந்த நேரத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

3. நான் அந்த நிலத்தை அளந்து பார்த்தேனா என்றால் இல்லை. எவ்வாறு முன் பணம் கொடுக்கப்பட்டது என்றால் கை ரொக்கமாக 500 ரூபாய் தாள்களாக கொடுத்தேன். சட்டப்படி 20 ஆயிரத்திற்கு மேல் கை ரொக்கமாக கொடுக்கக்கூடாது எனவே நான் சொல்வது ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை என்றால் சரியல்ல. இடத்தின் உரிமையாளர் கணேஷ் என்றால் தெரியும், அவர் திருப்பூரில் உள்ளார் என்றால் அது தெரியாது. 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியிடம் குடும்ப தேவைக்காக பணம் ரூ. 30 ஆயிரம் கடன் வாங்கி அதற்கு பாதுகாப்பிற்காக பொது அதிகாரம் எழுதி கொடுத்திருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்தத்தில் கால நிர்ணயம் எவ்வளவு எழுதப்பட்டது என்றால் 2 ஆண்டுகள் எழுதப்பட்டது, அந்த இரண்டு ஆண்டுகள் எப்போது முடிவுற்றது என்றால் 2021ல் முடிவுற்றது. இடைபட்ட காலத்தில் கிரையம் எழுதித்தர சொல்லி நான் ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் சட்ட அறிவிப்பு அனுப்பினேன்.

4. 2021ல் கிரைய ஒப்பந்தம் முடிவுற்ற நிலையில் நான் 10.12.2022 ம் தேதி தான் சட்ட அறிவிப்பு கொடுத்துள்ளேன். எனவே எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்ய சொல்லி 2ம் பிரதிவாதிக்கு 28.12.2019 ம் தேதி அறிவிப்பு வழங்கியுள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. அது தெரிந்து தான் நானும் 2ம் பிரதிவாதியும் சேர்ந்து அதற்கு முன் தேதியான 13.12.2019ம் தேதி பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்தம் மோசடியாக எழுதிக்கொண்டோம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தான் பெற்ற கடன் ரூ. 30 ஆயிரத்தை வட்டியுடன் 2ம் பிரதிவாதிக்கு செலுத்தி விட்டார் இருந்தும் 2ம் பிரதிவாதி பொது அதிகாரத்தை ரத்து செய்யாமலும் அசல் ஆவணத்தை தராமலும் கிரைய ஒப்பந்தம் எழுதியுள்ளார் என்றால் சரியல்ல.

5. மேலும் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதி மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார் என்றால் தெரியாது. அதே போல் பல்லடம் சார் பதிவாளர் அலுவலகத்தில் தடங்கள் மனு கொடுத்திருந்தார் என்றால் தெரியாது. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 27.07.2022 ம் தேதி 2ம் பிரதிவாதிக்கு கொடுத்த பொது அதிகாரத்தை ரத்து செய்துவிட்டார் என்றால் அது பற்றி தெரியாது. நான் கிரையம் பதிவு செய்ய

தயாராக இருந்ததாக  எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நானும் 2ம் பிரதிவாதியும் மோசடியாக கிரைய ஒப்பந்தத்தை தயாரித்து 1ம் பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/–)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.